| 12. | விழிகளை இழக்க நேரிட்டால் கூடத் தாய்த்தமிழினை இழந்து விடக்கூடாது என்று எண்ணியவர் _______. | இளங்குமரனார் |
| 13. | தமிழ்ச்சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர் _______. | தேவநேயப்பாவாணர் |
| 14. | உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி, அதன் தலைவராக இருந்தவர் ________ | தேவநேயப்பாவாணர் |
| 15. | போர்ச்சுகீசு நாட்டின் தலைநகரமான லிசுபனில், 1554இல் கார்டிலா என்னும் நூல் முதன்முதலாக மொழிபெயர்க்கப்பட்டு அச்சேறிய மொழி ________ | தமிழ்மொழி |
| 16. | ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ள நூல் ________ | கார்டிலா |
| 17. | இந்திய மொழிகளிலேயே மேலை நாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி ________ | தமிழ் |
| 18. | கடல்கடந்து முதன்முதலில் அச்சேறிய தமிழ் மொழி பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ள மலர் ________ | ஆறாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர் |
| 19. | தமிழ்த் தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் ________ | இளங்குமரனார் |
| 20. | இளங்குமரனார், தமிழகம் முழுவதும் ________ சொற்பொழிவுகளை வழங்கி வருகிறார் | திருக்குறள் |
| 23. | மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை ________ | கன்று |
| 24. | சம்பா நெல்லில் மட்டும் ________ உள்வகைகள் உள்ளன. | அறுபது |

## III. பிரித்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| அடிப்பகுதி | = | அடி | + | பகுதி |
| தோற்ற நிலை | = | தோற்றம் | + | நிலை |
| செந்நெல் | = | செம்மை | + | நெல் |
| மேற்பகுதி | = | மேல் | + | பகுதி |
| பழங்காலம் | = | பழமை | + | காலம் |

## IV. சேர்த்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| செம்மை | + | மொழி | = | செம்மொழி |
| வாழை | + | கச்சல் | = | வாழைக்கச்சல் |
| கூலம் | + | கடை | = | கூலக்கடை |
| அறிவு | + | ஒழுக்கம் | = | அறிவொழுக்கம் |

## V. பொருத்துக.

| அ. | | | | விடை |
|---|---|---|---|---|
| 1 | கழை | அ | நெட்டி | **மூங்கில்** |
| 2 | தட்டை | ஆ | நெல் | **சோளம்** |
| 3 | தாள் | இ | வாழை | **நெல்** |
| 4 | தண்டு | ஈ | மூங்கில் | **வாழை** |
| 5 | கோல் | உ | சோளம் | **நெட்டி** |

| ஆ. | பொருத்துக. | | | விடை |
|---|---|---|---|---|
| 1 | மா | அ | நுழாய் | **வடு** |
| 2 | பலா | ஆ | குரும்பை | **மூசு** |
| 3 | வாழை | இ | வடு | **கச்சல்** |
| 4 | தென்னை | ஈ | மூசு | **குரும்பை** |
| 5 | பாக்கு | உ | கச்சல் | **நுழாய்** |

## VI. நிறுத்தற்குறியிட்டு எழுதுக.

1. **வரகு காடைக்கண்ணி குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை.**
   வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

2. **பாவாணரின் சொல்லாய்வுக் கட்டுரைகள் நூலில் உள்ள தமிழ்ச் சொல்வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது.**
பாவாணரின் "சொல்லாய்வுக் கட்டுரைகள்" நூலில் உள்ள தமிழ்ச் சொல்வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது.

## VII. விடைக்கேற்ற வினா அமைக்க.

1. **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் கால்டுவெல்.**
திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் யார்?

2. **நெட்டி, மிளகாய்ச் செடியின் அடியைக் கோல் என்பர்.**
நெட்டி, மிளகாய்ச் செடியின் அடியை எவ்வாறு அழைப்பர்?

3. **திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் 'திருவள்ளுவர் தவச்சாலை' ஒன்றை இரா.இளங்குமரனார் அமைத்தார்.**
திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் 'திருவள்ளுவர் தவச்சாலையை அமைத்தவர் யார்?

4. **ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.**
ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கப்படியே, அந்நாட்டு மக்களின் எவை அமைந்திருக்கும்? **PTA - 3**

5. **தமிழில் 'சொல்லாய்வுக்' கட்டுரைகளைப் பாவாணர் எழுதினார்.**
தமிழில் 'சொல்லாய்வுக்' கட்டுரைகளை எழுதியவர் யார்?

6. **சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.** **PTA - 3**
சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?

## VIII. சந்திப்பிழை நீக்கி எழுதுக.

1. **இங்கு பயிர்வகை சொற்கள் மட்டும் சிறப்பாக காட்டப்பெறும்.**
இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாகக் காட்டப்பெறும்.

2. **காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தி தன்னை நிலைநிறுத்தி கொண்டுள்ளது தமிழ்.**
காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ்.

3. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க லீஃப் (Leaf) என்னும் ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது.

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

i) **ஒரு மொழியும், அதன் இலக்கியமும் எவ்வாறு அமையும்?**
**விடை :** ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும்.

ii) **தமிழ்மக்கள் இலைகளை எவ்வாறு பாகுபாடு செய்தனர்?**
**விடை :** வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை

iii) **தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்விதம் விளங்கிக்கொள்ளலாம்?**
**விடை :** தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**iv) மொழி ஆராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.**

**விடை :** ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என்னும் ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை.

**v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

**விடை :** தமிழ்ச் சொல் வளம்

## IX. குறுவினா (பாட நூல் வினா)

**1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**- மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

**சரியான தொடர்கள் :**

- ஒரு தாற்றில் பலசீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
- ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையான தொடர் :**

- ஒரு சீப்பில் பலதாறு வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழைக்கான காரணம் :**

- தாறு - வாழைக்குலை, சீப்பு - வாழைத்தாற்றின் பகுதி.
  எனவே, வாழைத்தாற்றில் தான் பல சீப்பு வாழைப்பழங்கள் இருக்கும்.

### கூடுதல் வினாக்கள்

**1. தாவரங்களின் இலை வகைகளை எவ்வாறு அழைப்பர்?**

**தாவரங்களின் இலை :**

- புளி, வேம்புவின் இலை → இலை
- நெல், புல்லின் இலை → தாள்
- சோளம், கரும்பின் இலை → தோகை
- தென்னை, பனையின் இலை → ஓலை
- காய்ந்த தாளும் தோகையும் → சண்டு
- காய்ந்த இலை → சருகு

**2. தாவரங்களின் நுனிப்பகுதியை (கொழுந்து) எவ்வாறு அழைப்பர்?**

**தாவரங்களின் நுனிப்பகுதி:**

- நெல், புல்லின் நுனி துளிர் அல்லது தளிர்,
- புளி, வேம்பின் நுனி முறி அல்லது கொழுந்து
- சோளம், கரும்பு, தென்னை, பனையின் நுனி குருத்து
- கரும்பின் நுனியைக் கொழுந்தாடை எனவும் அழைப்பர்.

**3. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?** ஆகஸ்ட் - 2022

**பூவின் நிலைகள் :**

i) பூவின் தோற்றநிலை அரும்பு,
ii) பூ விரியத்தொடங்கும் நிலை போது,
iii) பூவின் மலர்ந்த நிலை மலர்
iv) மரஞ்செடியினின்று பூ கிழேவிழுந்த நிலை வீ,
v) பூ வாடின நிலை செம்மல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. ஒரு நாட்டாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கான வழியாது?**
திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்குச் சிறந்த வழியாகும்.

**5. மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலக்கூடியது யாது?**
பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

**6. தேவநேயப் பாவாணரின் பிறப்புப் பற்றிக் கூறுக?**
திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் 07.02.1902 அன்று ஞானமுத்து - பரிபூரணம் இணையருக்கு மகனாகத் தேவநேயப் பாவாணர் பிறந்தார்.

**7. தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.** PTA - 1
- தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும் போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.
- தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் உள என்கிறார் கால்டுவெல்.

**8. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் கூலங்கள் யாவை?** ஏப் -2023
➢ வரகு ➢ காடைக்கண்ணி ➢ குதிரைவாலி முதலியன.

**9. பழங்களின் மேற்பகுதியைக் குறிக்க வழங்கும் சொற்கள் யாவை?**
மிக மெல்லியது தொலி, திண்ணமானது தோல், வன்மையானது தோடு, மிக வன்மையானது ஓடு, சுரையின் ஓடு குடுக்கை, தேங்காய் நெற்றின் மேற்பகுதி மட்டை, நெல் கம்பின் மூடியை உமி, வரகு கேழ்வரகு முதலியவற்றின் உமியைக் கொம்மை என்று வழங்குவர்.

**10. தாவரங்களின் குலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**
அவரை, துவரையைக் கொத்து, கொடி முந்திரியைக் குலை, வாழையைத் தாறு, கேழ்வரகு, சோளத்தைக் கதிர். நெல், தினையினை அலகு அல்லது குரல், வாழைத் தாற்றின் பகுதியைச் சீப்பு என்றும் வழங்குவர்.

**11. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?**
அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளையைக் கவை, கவையின் பிரிவைக் கொம்பு அல்லது கொப்பு, கொம்பின் பிரிவைக் கிளை, கிளையின் பிரிவைச் சினை, சினையின் பிரிவைப் போத்து. போத்தின் பிரிவைக் குச்சு, குச்சியின் பிரிவை இணுக்கு என்று வழங்குவர்.

**12. உலகப் பெருந்தமிழர் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார் இயற்றிய நூல்கள் யாவை?**
- இலக்கண வரலாறு
- தமிழிசை இயக்கம்
- தனித்தமிழ் இயக்கம்
- பாவாணர் வரலாறு
- குண்டலகேசி உரை
- யாப்பருங்கல உரை
- புறத்திரட்டு உரை
- திருக்குறள் தமிழ் மரபுரை
- காக்கைப் பாடினிய உரை
- தேவநேயம்

**13. தமிழ் மொழியில் காணப்படும் இலையின் பாகுபாடுகள் யாவை?**
இலையின் வன்மை, மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை என்ற பாகுபாடுகள் உள்ளன.

**14. நெட்டி செடி - பற்றி எழுதுக**
- ஒரு புல்வகை.
- களைச் செடியாக வளர்க்கப்பட்டு, உழும் போது வயலுக்கு இயற்கை உரமாகப் பயன்படுகிறது.
- நைட்ரஜனைத் தன்பால் கிரகிக்கும் தன்மையுடையது.
- இதன் கரி, வெடிமருந்து தயாரிக்கப் பயன்படுகிறது.
- இதன் தக்கை. மீன்பிடி வலைகளுக்கு மிதவைகளாகப் பயன்படுத்தப்படுகிறது.

**15. தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.** மே 2022
- **நாற்று :** நெல், கத்திரி முதலியவற்றின் இளநிலை;
- **கன்று :** மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை;
- **குருத்து :** வாழையின் இளநிலை;
- **பிள்ளை :** தென்னையின் இளநிலை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## X. சிறுவினா (பாட நூல் வினா)

**1. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'**
**இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.** PTA - 3 மே -2022

1. வயலில் நெல்நாற்று நட்டனர்.
2. சாலையோரத்தில் புளியங்கன்று வளர்ந்திருந்தது.
3. வாழைக்குருத்தைக் கண்டவுடன் மிகவும் மகிழ்ந்தேன்.
4. வீட்டில் தென்னம்பிள்ளை நட்டு வைத்தேன்.
5. குளக்கரையில் பனைவடலியைக் கண்டேன்.

## XI. சிறுவினா (கூடுதல் வினாக்கள்)

**1. தாவரத்தின் அடிப்பகுதியை எவ்வாறெல்லாம் குறிப்பிடுவர்?**
நெல், கேழ்வரகின் அடி தாள், கீரை, வாழையின் அடி தண்டு, நெட்டி, மிளகாய்ச் செடியின் அடி கோல், குத்துச்செடி, புதரின் அடி தூறு, கம்பு, சோளத்தின் அடி தட்டு அல்லது தட்டை, கரும்பின் அடி கழி, மூங்கிலின் அடி கழை, புளி, வேம்பின் அடி, அடி என்றே அழைக்கப்படுகின்றன.

**2. தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?**
- பூவோடு கூடிய இளம்பிஞ்சு பூம்பிஞ்சு எனப்படும்.
- இளம் காய் பிஞ்சு என்று அழைப்பர்.
- மாம்பிஞ்சு வடு என்றும், பலாப்பிஞ்சு மூசு என்றும், அழைக்கப்படுகிறது.
- தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு குரும்பை எனப்படும்.
- சிறு குரும்பையை முட்டுக் குரும்பை என்றும், முற்றாத தேங்காயை இளநீர் என்றும் அழைப்பர்.
- இளம்பாக்கை நுழாய், இளநெல்லைக் கருக்கல், வாழைப் பிஞ்சைக் கச்சல் என்றும் வழங்குவர்.

**3. கெட்டுப்போன காய் கனிகளை எவ்வாறு அழைப்பர்?**
- நுனியில் சுருங்கிய காய் சூம்பல் என்பர்.
- சுருங்கிய பழத்தைச் சிவியல், குளுகுளுத்த பழத்தை அளியல், குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காயை அழுகல் என்பர்.
- புழுப்பூச்சி அரித்த காய் அல்லது கனியைச் சொத்தை என்கிறோம். சூட்டினால் பழுத்த பஞ்சு வெம்பல் எனப்படும்
- பதராய்ப் போன மிளகாய் சொண்டு எனப்படும்.
- கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காயைக் கோட்டான் காய் அல்லது கூகைக்காய் என்பர்.
- தேரை அமர்ந்ததினால் கெட்ட காய் தேரைக்காயாகும்.
- தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காயை அல்லிக்காய் என்பர்.
- தென்னையில் கெட்ட காய் ஒல்லிக்காய் எனப்படும்.

**4. தானியங்களுக்கு வழங்கும் பெயர்களாகக் கூறப்படுவன யாவை?**
- நெல், புல் (கம்பு) முதலிய தானியங்கள் கூலம் எனப்படும்.
- அவரை, உளுந்து முதலியன பயறு ஆகும்.
- வேர்க்கடலை, கொண்டைக் கடலையைக் கடலை என்கிறோம்.
- கத்தரி, மிளகாயை விதை என்றழைப்பர்.
- புளி, காஞ்சிரையைக் காழ் என்பர்
- வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து முத்தாகும்.
- மா, பனையின் வித்தைக் கொட்டை, தென்னையின் வித்து தேங்காய் என்றழைக்கிறோம்.
- அவரை, துவரை பயறுகளை முதிரை என்றும் வழங்குகிறோம்.

**5. பாவாணர், தமிழ்ச்சொல்வளம் கட்டுரையில் விளக்கியுள்ளவை யாவை?**
- பாவாணர், தமிழ்ச்சொல்வளம் கட்டுரையில் வித்துவகை, வேர்வகை, அரித்தாள் வகை, காய்ந்த இலைவகை, இலைக்காம்பு வகை, பூமடல் வகை, அரும்பு வகை, பூக்காம்பு வகை, இதழ்வகை, காய்வகை, கனிவகை, உள்ளீட்டு வகை, தாவரக் கழிவு வகை, விதைத் தோல் வகை, பதர்வகை, பயிர்வகை, கொடி வகை, மர வகை, கரும்பு வகை, காய்ந்த பயிர்வகை, வெட்டிய விறகுத்துண்டு வகை, மரப்பட்டை வகை, பயிர்ச்செறிவு வகை, நிலத்தின் தொகுப்பு வகை, செய் வகை, நன்செய் வகை, வேலி வகை, காட்டு வகை ஆகியவற்றின் சொல் வளங்களையும் விளக்கியுள்ளார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**6. ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலரில் இடம்பெற்றுள்ள தமிழ் மொழி பற்றிய குறிப்புகள் யாவை?**

**கடல்கடந்து முதன்முதலில் அச்சேறிய தமிழ்**

- போர்ச்சுகீசு நாட்டின் தலைநகரான லிசுபனில், 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன்முதலாகத் தமிழ்மொழியில் தான் மொழிபெயர்க்கப்பட்டது.
- இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது.
- அன்றைய காலத்திலேயே கருப்பு, வெள்ளை என்ற இரு வண்ணங்களில் மாறி மாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது.
- இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ் மொழியே.

**7. தேவநேயப் பாவாணர் - சிறுகுறிப்பு வரைக**

**காலம்** : 07.02.1902 – 15.01.1981

**பெற்றோர் :** ஞான முத்து – பரிபூரணம் அம்மையார்.

- மிகச்சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார்.
- பெருஞ்சித்திரனாரால் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் என்று அழைக்கப்பட்டார்.
- பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிய பாவாணர், தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.
- செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.
- உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

## XII. நெடுவினா (பாட நூல் வினா)

**1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.** PTA - 3 செப் -2021 மே -2022

வணக்கம், ஒருவர் நம் கருத்தையோ மொழியையோ மற்றவருக்கு உணர்த்த சரியான சொற்களைப் பயன்படுத்தினால்தான் மற்றவர் அதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.பேச்சு வழக்குச் சொல்லும் எழுத்து வழக்குச் சொல்லும் சில நேரங்களில் மாறுபடுகின்றது. தமிழ் மொழியில் நாம் எழுதுவதை அப்படியே பேசவும் முடியும். ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளில் இது மாறுபடுகின்றது.

ஒருமொழி நிலைபெற்று இருக்க வேண்டுமானால் அம்மொழியில் அதிகச் சொல்வளம் இருக்க வேண்டும். தமிழ்மொழி செம்மொழியாகத் திகழ்வதற்கான காரணங்களுள் ஒன்று அதிகமான சொல்வளம் இருப்பது. ஆங்கில மொழியிலும் இன்று புதிய புதிய கலைச் சொற்களைத் தினமும் உருவாக்குகின்றனர். தமிழ்மொழியில் போதுமான சொல்வளம் இருந்தாலும், இன்னும் அதிகமான சொற்கள் உருவாக்கப்படவேண்டும்.

இயற்கை நமக்கு அதிகமான வளங்களைத் தருகின்றன என்ற போதிலும் அவற்றைப் பயன்படுத்தி அழிப்பது மட்டும் நம் கடமை அல்ல. மாறாக, அவற்றை மீண்டும் உற்பத்திசெய்து அவற்றின் வளமும் பலமும் குறையாமல் பார்த்துக்கொள்வது நம் கடமை. தமிழ் மொழிக்கு இவை முற்றிலும் பொருந்தும். நம் மொழி உலக அரங்கில் நிலைத்து நிற்க வேண்டுமானால், நாம் இன்னும் பல சொற்களைப் புதிதாக உருவாக்கவேண்டும். அதிகமான வேர்ச்சொற்கள் உள்ள நம் தமிழ்மொழியில், இன்னும் அதிகமான சொல்லாக்கத்திற்கான தேவை இன்னும் உள்ளது என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

நன்றி. வணக்கம்

### மெல்ல கற்கும் மாணவர்களுக்கானது

- சரியான சொற்களை பயன்படுத்தினால் மட்டுமே பிறர் புரிந்துகொள்ள முடியும்.
- தமிழ்மொழியில் எழுதுவதை அப்படியே பேசமுடியும், பிற மொழிகளில் இது மாறுபடும்.
- ஒரு சொல் குறித்த பல சொற்கள், பல பொருள் தரும் ஒரே சொல் தமிழில் மட்டுமே உண்டு.
- மொழி நிலைபெற அதிகச் சொல்வளம் வேண்டும். தமிழில் சொல்வளம் நிறைந்துள்ளது.
- புதிய புதிய சொற்களைத் தமிழில் உருவாக்க வேண்டும்.
- தமிழில் அதிகமான சொல்லாக்கம் இன்னும் தேவை.

நன்றி. வணக்கம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

**1. பிறமொழிகளில் காணமுடியாத சொல்வளத்தைத் தமிழ்மொழியில் காணமுடியும் என்பதற்குப் பாவாணர் காட்டும் சான்றுகள் யாவை?**

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புலமக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையவர்.

எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க leaf என ஒரேசொல் உள்ளது.

தமிழ்ப் பொது மக்களைப் போல வன்மை, மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு வேறு மொழியில் இல்லை.

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையது என்பது, அதன் விளைபொருள் வகையை வைத்தே அறியலாம்.

பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன.

கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சிலவகைகளே உண்டு.

தமிழ்நாட்டு நெல்லிலோ செந்நெல்,வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகை இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டுமே ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது வகைகள் உள்ளன.

ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

## கற்பவை கற்றபின்...

**1. பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**

**தரிசு** - பயிரிடப்படாத நிலம். வெறுமனே வெறும் புல் பூண்டுகள் முளைத்துக் காணப்படுகின்ற நிலம்.

**சிவல்** - செந்நிலம். சிவப்பு மண் அதிகம் நிறைந்த நல்ல பயிரிடப்படக்கூடிய நிலம். விவசாயத்திற்கு ஏற்ற நிலம்.

**கரிசல்** - தண்ணீரை உறிஞ்சும் தன்மை கொண்டது. பருத்தி, கரும்பு, வாழை, உளுந்து போன்ற பயிர்கள் வளரும். ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் தாழ்நிலப் பகுதிகளிலும் வளமிக்க மண்ணாக உள்ளது.

**முரம்பு** - பருக்கைக் கற்கள் அதிகம் உள்ள மேட்டுநிலம். விவசாயத்திற்கு ஏற்ற இடம் இல்லை.

**புறம்போக்கு** - ஊர்ப்புறத்தில் குடிகள் வாசம் இல்லாத பகுதி.

**சுவல்** - மேடான இடம். பயிரிடமுடியாத நீர் வளம் இல்லாத இடம்.

**அவல்** - நல்ல பள்ளமான நிலம். நீர்வரத்து அதிகமுள்ள விளைநிலம்.

**2. ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.**

**(எ.கா)** சொல்லுதல் - பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல்.

நிலவு - மதி, சந்திரன், நிலா, திங்கள்.

சூரியன் - பகலவன், ஆதவன், கதிரவன், தினக்கதிர், ஞாயிறு

மலர் - பூ, அரும்பு, போது, அலர், வீ.

உக்கிரம் - கொடுமை, சினம், வேகம், தலைக்காவல், இலாமிச்சை.

உசவுதல் - கேட்டல், விசாரித்தல், ஆலோசித்தல்.

இலஞ்சி - குளம், மகிழ மரம், மடு, மதில், புன்கு மரம்,சாரைப் பாம்பு.

எல்லை - வரம்பு, பொழுது,இடம், கூப்பிடு தூரம், அளவை, முடிவு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 1

## கவிதைப் பேழை

# இரட்டுற மொழிதல் - சந்தக்கவிமணி தமிழழகனார்

### சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| துய்ப்பது - | கற்பது, தருதல் | ஆழி - | கடல் |
| மேவலால் - | பொருந்துதல்,பெறுதல் | இணை - | சமம், பொருத்தம் |
| நித்தம் - | எப்பொழுதும் | | |

### திறன் அறிவோம்

## ஒரு மதிப்பெண் வினா

### I. பலவுள் தெரிக. (பாட நூல் வினா)

1. **'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது.**
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
**விடை: அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும்காப்பியங்களும்**

### கூடுதல் வினாக்கள்

1. **முத்தமிழ் என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
அ) முத் + தமிழ் ஆ) மூன்று+ தமிழ் இ) மூ+ தமிழ் ஈ) மூத்த+ தமிழ்
**விடை: ஆ) மூன்று + தமிழ்**

2. **முச்சங்கம் என்பதை ------------- எனப் பிரிக்கலாம்.**
அ) முச் + சங்கம் ஆ) மு+ சங்கம் இ) மூன்று+ சங்கம் ஈ) மூத்த+ சங்கம்
**விடை: இ)மூன்று + சங்கம்**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. இயல்,இசை,நாடகம் ஆகிய மூன்றும் _______ ஆகும் | முத்தமிழ் |
| 2. _______ சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்ந்தது. | மூன்று |
| 3. ஆழி என்பதன் பொருள் ______ . | கடல் |
| 4. சங்குகள் ______ வகைகளில் கிடைக்கும். | மூன்று |
| 5. புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பு _______ அழைக்கப்படும். | தனிப்பாடல்திரட்டு |
| 6. சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படுபவர் _______. | தமிழழகனார் |
| 7. தமிழழகனாரின் இயற்பெயர் _______. | சண்முகசுந்தரம் |
| 8. தமிழழகனார்_______சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். | பன்னிரண்டு |
| 9. தமிழ் கடலோடு ஒத்திருத்தலை இரட்டுற மொழிந்தவர் ________ | தமிழழகனார் |
| 10. சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது _______ | தமிழ் |

### III. பிரித்து எழுதுக.

1. முத்தமிழ் - மூன்று + தமிழ்
2. முச்சங்கம் - மூன்று + சங்கம

### IV. இலக்கணக் குறிப்பு தருக

1. சங்கத்தவர் - வினையாலணையும் பெயர்
2. காக்க - வியங்கோள் வினைமுற்று



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. பகுபத உறுப்பிலக்கணம்

**காக்க** - கா + க் + க
கா - பகுதி
க் - சந்தி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

## VI. பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:

1. முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால் **PTA - 5**
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

**வினா – விடை :**

1. **முத்தமிழ் என்பது யாது?**
இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியவை முத்தமிழாகும்.

2. **முச்சங்கம் - விரித்து எழுதுக.**
முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்

3. **தமிழுக்கு இணையாய் பாடலில் பொருத்தப்படுவது?**
கடல்

4. **இப்பாடல் இடம்பெற்ற நூல்?**
தனிப்பாடல் திரட்டு

5. **இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகையை எடுத்தெழுதுக.**

முத்தமிழ் .......
மெத்த .......
} த் – அடி எதுகை

அணைகிடந்தே .......
இணைகிடந்த .......
} ணை – அடி எதுகை

6. **பாடலில் ............ அணி இடம்பெற்றுள்ளது.**
இரட்டுறமொழிதல் அணி

## VII. குறுவினா (பாட நூல் வினா)

1. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**
   - இசை விமரிசகர் சுப்புடுவின் விமரிசனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும்.
   - ஒரு முறை ஒரு பெரிய வித்துவானுடைய இசைநிகழ்ச்சியை விமரிசனம் செய்யும் போது, “அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்” என்று சிலேடையாகக் குறிப்பிட்டார்.

### கூடுதல் வினாக்கள்

1. **முத்தமிழ், முச்சங்கம் விளக்கம் தருக?**
   - தமிழானது இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என முத்தமிழாய் வளம் பெற்றுத் திகழ்கிறது.
   - முதல் சங்கம், இடைச்சங்கம்,கடைச்சங்கம் என்ற முச்சங்கங்களால் தமிழ் வளர்க்கப்பட்டது.

2. **ஐம்பெரும் காப்பியங்கள் யாவை?** **மே -2022**
   - சிலப்பதிகாரம்
   - மணிமேகலை
   - சீவகசிந்தாமணி
   - வளையாபதி
   - குண்டலகேசி

3. **கடல் எவற்றைத் தருகிறது?**
   - கடல், முத்தினையும் அமிழ்தத்தினையும் தருகிறது.
   - வெண்சங்கு, சலஞ்சலம்,பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. **இரட்டுற மொழிதல் விளக்கம் தருக?**
   - ஒரு சொல்லோ,சொற்றொடரோ இரு பொருள் பட வருவது இரட்டுற மொழிதல் ஆகும். இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.
   - செய்யுளிலும் உரைநடையிலும் மேடைப் பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

## VIII. சிறு வினா (பாட நூல் வினா)

1. **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.** PTA - 6 ஏப் -2023

| பாடல் வரிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | ➢ தமிழானது இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது. | ➢ கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது. |
| முச்சங்கம் | ➢ முதல், இடை, கடை, ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது | ➢ வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| மொத்த அணிகலன் | ➢ ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்று அழகு தருகிறது. | ➢ கடல் மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும் படி வழி தருகிறது. |
| சங்கத்தவர் காக்க | ➢ சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது. | ➢ தன் அலைகளால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது. |

இவ்வாறு தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழிந்து கூறுகிறார்.

### கூடுதல் வினாக்கள்

1. **சந்தக் கவிமணி தமிழழகனார் –ஆசிரியர் குறிப்பு வரைக.**
   - சந்தக் கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முக சுந்தரம்.
   - இலக்கணப் புலமையும் இளம் வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றவர்.
   - இவர் பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

## கற்பவை கற்றபின்...

1. **அ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ., ‘‘அட்டே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!’’ என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.**

   **ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமரிசனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒரு முறை ஒரு பெரிய வித்துவானுடைய இசை நிகழ்ச்சியை விமரிசனம் செய்யும் போது அவர் குறிப்பிட்டது: ‘‘அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்’’.**

   **இ) தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது ‘‘இவர் பல்துறை வித்தகர்’’ என்று குறிப்பிட்டார். இவைபோன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவற்றைத் தொகுத்துச் சொல்நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.**

   அ) கி.வா.ஜெகந்நாதன் அவர்களுக்கு நண்பர் வீட்டிலே அருந்துவதற்காகப் பால் தந்தார்கள். பாலில் எறும்பு இறந்து மிதப்பதைக்கண்டு “சீனிவாசன் பாற்கடலில் துயில் கொள்கிறான்” என்றார். சீனியில் கிடந்த எறும்பை இவ்வாறு சொன்னதைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

   ஆ) சென்னை வரவேற்கிறது, ஆம் சென்னை வர வேர்க்கிறது. (வியர்க்கிறது என்பதன் பேச்சு வழக்கு) இவ்வாறு கூறினார்கள்.

   இ) வீட்டில் மனைவியைக் கணவன் “ஏற்றுமின் விளக்கை இருளகவே” என்று கூறினான். “ஏற்று மின் விளக்கை ” என்றா கூறுகிறீர்கள் என்று மனைவி கேட்டாள்.

2. **மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக.**
   - தமிழ் எங்கள் இளமைக்குப் பால்<br>தமிழ் எங்கள் உயிர்க்கு நேர் **– பாரதிதாசன்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- தேனொக்கும் செந்தமிழே நீ கனி! நான் கிளி!
  வேறென்ன வேண்டும் இனி **- பாரதிதாசன்**
- தாயே உயிரே தமிழே நினை வணங்கும்
  ஆட்சிக்கும் அஞ்சாமல் முழங்கிடுவேன் **- முடியரசன்**
- கனியிடை ஏறிய சுளையும் முற்றல்
  கழையிடை ஏறிய சாறும்
  பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
  பாகிடை ஏறிய சுவையும்
  நனிபசு பொழியும் பாலும் - தென்னை
  நல்கிய குளிரிள நீரும்
  இனியன என்பேன் எனினும் - தமிழை
  என்னுயிர் என்பேன் கண்டீர் **- பாரதிதாசன்**
- வீறுடை செம்மொழி தமிழ்மொழி
  உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி **- பாவலரேறு பெருஞ்சித்திரனார்**
- கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர்
  பூக்காடு நானோர் தும்பி **- பாரதிதாசன்**
- யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
  இனிதாவது எங்கும் காணோம் **- பாரதியார்**
- வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
  வாழிய வாழியவே
- வான மளந்த தனைத்தும் அளந்திடும்
  வண்மொழி வாழியவே!
- வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
  வளர்மொழி வாழியவே! **- பாரதியார்**

# இயல் 1 விரிவானம்

# உரைநடையின் அணிநலன்கள் - எழில்முதல்வன்

## I. நெடுவினா (பாட நூல் வினா)

**1. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.** PTA - 2

**சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப்பற்றி உரையாடுதல் :**

**உறவினர் மகள்** : வணக்கம்! தாங்கள் நலமாக உள்ளீர்களா!

**நான்** : வணக்கம். நான் நலமாக உள்ளேன். அப்பா எப்படி உள்ளார்?

**உறவினர் மகள்** : அப்பா, அம்மா மற்றும் வீட்டில் உள்ள அனைவரும் நலம்.

**நான்** : மிகவும் அருமையாகத் தமிழ் பேசுகிறீர்களே! தமிழ் மீது அவ்வளவு ஆர்வமா!

**உறவினர் மகள்** : நண்பர்களோடு பேசிப் பேசித் தமிழ் பழகி விட்டேன். ஓரளவு பேசத்தெரிகிறது.

**நான்** : ஓரளவா? இல்லை. நன்றாகவே பேசுகிறீர்கள். இன்னும் தமிழின் பெருமைகள் பற்றி அறிந்தீர்களென்றால் பெரிய பேச்சாளராகிவிடுவீர்கள்.

**உறவினர் மகள்** : சரி! சொல்லுங்கள். நானும் தெரிந்து கொள்கிறேன்.

**நான்** : தமிழ் மிகவும் தொன்மையான மொழி. சொல் வளம் மிகுந்த மொழி. ஒரே பொருளைத் தரக்கூடிய பல சொற்கள் தமிழில் உள்ளன. நீங்கள் சூரியனைக் குறிக்க sun என்று குறிப்பிடுகிறீர்கள். நாங்கள் கதிரவன், பகலவன், ஆதவன், பரிதி, எல், ஞாயிறு என்று பல சொற்களைக் கூறுவோம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**உறவினர் மகள்** : வியப்பாக உள்ளதே! மேலும் ஏதாவது சிறப்புகள் உள்ளனவா?

**நான்** : ஒரு சொல்லுக்கு அதே பொருள் தரும் பல சொற்கள் தமிழில் உண்டு. சொல்லுதல் என்பதற்கு நவிலுதல், பேசுதல், விளம்புதல், செப்புதல், கூறல், இயம்பல், மொழிதல் என்ற சொற்களும் உண்டு.

**உறவினர் மகள்** : மேலும் மேலும் வியப்பாகஉள்ளதே!

**நான்** : இன்னும் நிறைய சிறப்புகள் உண்டு.தமிழில் நிறைய அறஇலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள் உண்டு.

**உறவினர் மகள்** : தமிழ் மொழியானது வளமையான மொழி என்று தெரியும். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உலகிலேயே செம்மையான சிறந்த மொழி தமிழ் மொழி தான் என்று தெரிகிறது.

**நான்** : உண்மைதான். தமிழைப் பேசிப் பாருங்கள், தமிழ் இலக்கியங்களைப் படித்துப்பாருங்கள், அதன் இனிமையைச் சுவைத்துப் பாருங்கள். அப்போது தமிழின் சிறப்பை மேலும் உணர்வீர்கள்.

**உறவினர் மகள்** : நன்றி, வாய்ப்புக் கிடைக்கும் போது இன்னும் தமிழ் மொழி பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன்.

## கூடுதல் வினாக்கள்

**1. உரைநடையின் அணிநலன்கள் என்ற தலைப்பிலுள்ள துணைப்பாடத்தைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை:**

சங்கப்புலவர் ஒருவருக்கும் கால இயந்திரமான இணையதமிழனுக்கும் இடையே 'உரைநடையின் அணிநலன்கள்' என்ற தலைப்பில் நடைபெறுகின்ற உரையாடலைக் கட்டுரையாகக் காண்போம்.

**உரையாடல்**

பாட்டும் தொகையும் கூறும் அகமோ, புறமோ, உள்ளுறை உவமையோ, இறைச்சியோ, பாவகைகளோ இல்லை. காப்பியம், சிற்றிலக்கியம், சந்தக் கவிதைகள், புதுக்கவிதைகள் பற்றிய செய்யுள் வகைகளும் இல்லை. மாறாக உரைநடையில் எழுதப்படும் சிறுகதை, கட்டுரை, புதினம் போன்ற உரைநடையைப் பற்றிய உரையாடலாக இது அமைகின்றது. நாம் பேசுவது உரையாடல், எழுதினால் அது உரைநடையாக மாறுகின்றது.

**உவமை, உருவகம்**

"திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக் கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள் " என்று குறிஞ்சிமலரில் நா. பார்த்தசாரதி பயன்படுத்தியுள்ளார். தண்டியார் 'உவமையும் பொருளும் வேற்றுமை ஒழித்து ஒன்றெனமாட்டின் அஃது உருவகமாகும்' என்றதைக் "களம்புகழ் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று" என்று அறிஞர் அண்ணா எழுதினார்.

**எடுத்துக்காட்டு உவமையும் எதுகை மோனையும்**

திருக்குறளில் காட்டப்பெற்ற எடுத்துக்காட்டு உவமையைத் தற்காலத்தில் 'இணை ஒப்பு' என்கிறோம். இதற்குச் சான்றாக எழுத்தாளர் வ. ராமசாமி எழுதிய 'மழையும் புயலும்' என்ற நூலில் காணலாம். அதுபோல எதுகை மோனையில் எழுந்த உரைநடையைச் சொல்லின் செல்வர் இரா.பி. சேதுபிள்ளை எழுதிய 'தமிழின்பம்' என்ற நூலில் காண முடிகிறது.

**அஃறிணையை உயர்திணையாய்**

இலக்கணத்தில் தொல்காப்பியர் அஃறிணைப் பொருள்கள் சொல்லுவதும் கேட்பதும் நிகழ்கின்றது. (தொல்.192). இதைத் தற்காலத்தில் தமிழ்த் தென்றல் திரு.வி.க அதிகமாக எழுதியுள்ளார்."சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும்; ஆலமர நிழலில் அமர்வேன். ஆல்," விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா? என்றும் அரசு கண்ணிற்படும் 'யான் விழுதின்றி வானுற ஓங்கி நிற்கிறேன், என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள். காண் " என்றும் எழுதினார்.

**முரண்பாடு மெய்ம்மை**

முரண்பட்ட சொற்களைச் சேர்த்து எழுதுவது உரைநடை எழுதுவதின் மற்றொரு உத்தியாகும். கலப்பில்லாத பொய்' இதைச் 'சொல்முரண்' (oxymoron) என்றும் எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவதை 'எதிரிணை இசைவு' (Antithesis) என்கிறோம். அதேபோல் படிப்பதற்கு முரண்படுவதுபோல் இருக்கும்: உண்மையில் முரண்படாத மெய்ம்மையைச் சொல்வது முரண்பாடு மெய்ம்மை (paradox) என்ற உத்திகளும் உரைநடை எழுதும்போது பயன்படுத்தப்படுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**உணர்ச்சி வெளிப்பாடு**

விடைதரவேண்டிய தேவை இல்லாமல் கேள்வியிலேயே பதில் இருப்பதைப் போலவும் எழுதுவது உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு உதவும் என்பதற்குப் பெரியாரைப் பற்றி அறிஞர் அண்ணா கூறியதைச் சான்று காட்டலாம். " அவர் (பெரியார்) பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா?......". மேலும் "இந்தியா தான் என்னுடைய மோட்சம்: இந்தியாவின் நன்மை தான் என் நன்மை. இந்தியா தான் என் இளமையின் மெத்தை : என் யௌவனத்தின் நந்தவனம்: என் கிழக்காலத்தின் காசி" என்று பாரதி தம் நாட்டை உணர்ச்சி பொங்கப்பாடுவது உணர்ச்சி வெளிப்பாட்டிற்குச் சான்றாகும்.

**முடிவுரை:**

இவ்வாறு சங்கப்புலவனும் இணையத்தமிழனும் தமிழ் உரைநடையின் உத்திகளையும் அது எவ்வாறு தன்னுடைய பரிணாம வளர்ச்சியை எட்டியது என்பதைப் பற்றியும் கலந்துரையாடினர், என்பதை மா.இராமலிங்கம் (எ) எழில்முதல்வன் தம்முடைய புதிய உரைநடை என்ற நூலின் வழியாக நமக்கு விளக்குகிறார்.

## கற்பவை கற்றபின்...

1. **நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம் பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.**

| | இலக்கியத் தொடர் | இடம் பெற்றுள்ள நயம் |
|---|---|---|
| **எ.கா.** | உள்ளங்கை நெல்லிக்கனி போல | உவமை |
| 1 | அனலிடைப்பட்ட புழுவைப் போல | உவமை |
| 2 | இலவு காத்த கிளி போல | உவமை |
| 3 | அடியற்ற மரம் போல | உவமை |
| 4 | மலரும் மணமும் போல | உவமை |
| 5 | முதலைக் கண்ணீர் வடித்தான் | உருவகம் |
| 6 | பசுமரத்தாணி போல | உவமை |

2. **கொடுத்த தலைப்பில் பேசுவோம்.**

தலைப்பு – **நேரம்** தவிர்க்க வேண்டிய சொல் – **கடிகாரம்.**

**குறிப்பு –** ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஐந்து வினாடிகளுக்குமேல் இடைவெளி இருத்தல் கூடாது. இது போன்று வேறு வேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப் பழகுக.

நாம் நேரத்தை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும். நேரத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டால் தான்நாம் பயனுள்ளவற்றைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க முடியும், காலம் பொன் போன்றது என்பதை உணர்ந்து செயல்படுவோம். நம் கடமைகளைச் சிறப்புறச் செய்து மாண்புறுவோம்.

**தலைப்பு** – நோய்
**தவிர்க்க வேண்டிய சொல்** – மருத்துவர்,

ஒவ்வொருக்கும் ஏதாவது ஒரு நோய், துன்பம் தந்து கொண்டே இருக்கிறது. நாம் நோயின் தன்மை, நோய்க்கான காரணம் போன்றவற்றை அறிந்து செயல்பட வேண்டும் "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்கிறார் வள்ளுவர்.

## கூடுதல் வினாக்கள்

1. **வெளிநாட்டில் வேலை செய்துகொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள் ________ வருந்திக்கொண்டிருந்தாள். – விடுபட்ட இடத்தில் பொருத்தமான உமையைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க.** PTA - 6

அ) தாமரை இலை நீர்போல்
ஆ) வாழையடி வாழையாக
இ) கண்ணினைக் காக்கும் இமை போல்
ஈ) மழைமுகம் காணாப் பயிர்போல

**விடை: ஈ) மழைமுகம் காணாப் பயிர்போல**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**முடிவுரை:**

ஒட்டுமொத்த உலகமே கொரோனா பெருந்தொற்றில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து விரட்டிட வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் கடந்த காலத்தில் எத்தனையோ பேரிடர்களை கண்டிருந்தாலும் இந்த ஒரு பெருந்தொற்றிலிருந்தும் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நம் கடமையாகும். ஏனெனில், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும் என்பது நம் உயரிய எண்ணமும் செயலுமாக அமைய வேண்டும்.

# 9. கடிதங்கள்

## 1. வரவேற்பு மடல்

பள்ளி இலக்கிய மன்றத் தொடக்க விழாவிற்கு வருகை தந்துள்ள நாவலர் ஞானசம்பந்தன் அவர்களை வரவேற்கும் வரவேற்பு மடல்.

**தமிழ் உலவும் பொதிகைத் தென்றலே!**

தங்கள் வருகை எங்கள் அனைவருக்கும் உவகை. பொதிகைத் தென்றலாய்ப் புறப்பட்டு வருகை புரிந்துள்ள தென்றலே வருக! வருக! சொல்நயம் மிக்க நாவலராய் வலம்வரும் அறிஞரே வருக! வருக! தங்களை இதய மலர்களால் இனிதுடன் வருக வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறோம்.

**நாவன்மை மிக்க நாவலரே!**

மேகம் தவழ்ந்து மழை பொழிவதைப் போலச் சொல்லாற்றலால் எங்களுக்குத் தமிழ் மழை பொழிய வந்த கார்மேகமே வருக! வருக! மேகம் கண்டு ஆடுகின்ற மயில்கள் போன்ற நாங்களும் உம் சொல்மழையில் நனையவிழைகின்றோம்.

**எல்லோரும் விரும்பும் இனிய பேச்சாளரே!**

சென்ற இடமெல்லாம் செந்தமிழைச் செழுந்தமிழாய்த் தேன் தமிழாய்த் தித்திக்கத் தித்திக்க வழங்கி வரும் தேனிசைத் தமிழ்த்தென்றலே வருக! வருக!

**பாவலராய்ப் பரிணமித்த தமிழரே!**

"எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!" என்பதனையே குறிக்கோளாய்க் கொண்டு நாள்தோறும் தமிழ்த் தொண்டாற்றி வரும் பாவலரே வருக! வருக!. உம் சொல் மழையில் நனைய ஆவலோடு காத்திருக்கிறோம். தமிழோடு பிறந்த தவப்புதல்வரே! பட்டங்கள் பல பெற்றுள்ளீர்! பாங்குடன் நற்பணி ஆற்றியுள்ளீர்! பட்டிதொட்டியெல்லாம் பட்டிமன்றங்கள் வாயிலாகத் தமிழை வளர்த்துள்ளீர்! தமிழுக்கு நீர் செய்த சேவை பெரிது. உம் சேவை என்றும் தொடர வருக! வருக! என உம்மை வரவேற்றுக் கொள்வதில் மகிழ்வெய்துகிறோம்.

**தமிழ்த்தாயின் தவப்புதல்வரே!**

"என்னால் தமிழ் வாழும், எந்நாளும் தமிழ் வளர என்னுயிர் தருவேன்" என்ற கொள்கையுடைய தூயவரே உம் கருத்தில் செவிகுளிரக் கனிவுடன் காத்திருக்கிறோம், நும் தமிழ்ப்பணி என்றும் தொடர வேண்டுமென்று வாழ்த்தி வருக! வருக! எனக் கூறி வரவேற்கின்றோம்.

இங்ஙனம்,

அஅஅ, தமிழ் இலக்கிய மன்றத்தார்,

___|___|20___ அரசு மேல்நிலைப்பள்ளி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2. முன்னெச்சரிக்கை கடிதம்

**பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்குக் கடிதம் ஒன்று எழுதுக.** **மே 2022**

காஞ்சிபுரம்,
3.12.2022.

அன்புள்ள தாத்தா பாட்டிக்கு,

தங்களின் பேரன் எழுதும் அன்பு மடல், நான் மற்றும் இங்குள்ள அனைவரும் நலம். அதுபோல் அங்கு நீங்கள் இருவரும் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்வார்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டினால் இன்று அதிகமான நோய்த்தொற்றிற்க்கு மக்கள் ஆளாக்கப்படுகிறார்கள். உணவுப் பழக்கவழக்க மாறுபாட்டாலும் பல நோய்கள் வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் 'கோவிட்-19' என்னும் பெருந்தொற்று உலகையே ஆட்டிவைக்கிறது. அதிலிருந்து நம்மை நாமே தற்காத்துக் கொள்ளல் வேண்டும். முகக்கவசம் அணிதல், தனிமைப் படுத்திக்கொள்ளல், அடிக்கடி கைகளை 'சோப்புப் போட்டு கழுவுதல்' சத்தான உணவுகளை உண்ணுதல் போன்றவற்றால் நம்மை நாமே நோயிலிருந்து காத்துக்கொள்ள இயலும்.

நீங்கள் இருவரும் வெளியில் செல்லும்போது பாதுகாப்பாக சென்றுவர வேண்டும். "வருமுன் காப்பதே சிறந்தது" என்பார்கள், அதுபோல நோய் வராமல் பாதுகாப்பது நம் கடமை. நான் உங்களுக்கு அறிவுரை கூறும் நோக்கில் இக்கடிதம் எழுதவில்லை, அக்கறையின் காரணமாகவே அன்போடு எழுதுகிறேன். மற்றவை அடுத்த விடுமுறையில் சந்திக்கும்போது.

நன்றி! வணக்கம்.

தங்கள் அன்பு பேரன்,
செ.தமிழரசன்,

உறைமேல் முகவரி,
வ.மாரிமுத்து,
162, ஓச்சேரி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

## 3. கண்டு களித்த இடம் குறித்து நண்பனுக்குக் கடிதம்

அஅஅ
___|___|20___

**அன்பு நண்பன் அன்புமணிக்கு,**

வணக்கம். இங்கு அனைவரும் நலம். உன் நலமும், உற்றார் உறவினர் நலமும் அறிய அதிக ஆவல்.

என் இனிய நண்பனிடம் யான் பெற்ற இன்பமான செய்திகளைப் பகிர்வதில் எனக்கு அலாதி மகிழ்ச்சி. நானும் எனது வகுப்பு மாணவர்கள் ஐம்பது பேரும் வகுப்பு ஆசிரியருடன் சென்ற வாரம் கன்னியாகுமரிக்குச் சென்றோம். காலை 5.45 மணிக்கெல்லாம் நாங்கள் கன்னியாகுமரி அடைந்துவிட்டோம்.

எங்குப் பார்த்தாலும் ஒரே மக்கள் கூட்டம். எதிரே பார்த்தால் கடலலை; தரையில் பார்த்தால் மக்கள் தலை. சரியாக 6.10 மணிக்குக் காலைக் கதிரவன் தன் பொன்னிறமான கதிர்களை வீசிக் கடலில் இருந்து குளித்து எழுந்தான். தண்ணீர் பொன்னிறமாக மின்னிய அந்தக் காலைக் கதிரவன் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

தொடர்ந்து அன்னை பூங்காவையும் அழகுறக் கண்டு மகிழ்ந்தோம். காந்தி மண்டபத்தைக் கவனமுடன் பார்த்தோம். அங்குள்ள அரிய செய்திகள், புகைப்படங்கள் எங்கள் மனதைக் கவர்ந்தன.

அதன் பிறகு படகு வழியாக விவேகானந்தர் பாறைக்கு விரைந்தோம். கடலலை எங்களைத் தாலாட்டுப் பாடி விவேகானந்தர் பாறைக்குக் கொண்டு சேர்த்தது.

சாலைகள் நடுவே ஆர்ப்பரித்து உயர்ந்து நிற்கும் விவேகானந்தர் மண்டபம் எங்கள் மனதை மிகவும் கவர்ந்தது. மண்டபத்தில் தியானம் செய்ததால், எங்கள் மனதெல்லாம் அமைதியும் ஆனந்தமும் நிறைந்து வழிந்ததை எப்படிச் சொல்ல!

அருகிலுள்ள வானுயர உயர்ந்து நிற்கும் திருவள்ளுவரின் சிலையை அண்ணாந்து பார்த்து ஆனந்தமடைந்தோம். வான்புகழ் வள்ளுவரின் குறட்பாக்கள் எங்கள் மனதில் நிழலாடின.



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



தொடர்ந்து கடைவீதிகளில் பல கலைப்பொருட்களை வாங்கினோம். அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்து வீடு திரும்பினோம். கோடை விடுமுறையில் உன் வருகையை எதிர்பார்க்கிறேன்.

**இப்படிக்கு,**
அன்புமிகு நண்பன்,
**அஅஅ.**

**உறைமேல் முகவரி:**

| **பெறுநர்** | அ.தலை |
|---|---|
| த. அன்புமணி,<br>10, வள்ளலார் தெரு,<br>மதுரை. | |

## 4. சாலையைச் சீரமைக்க வேண்டி விண்ணப்பம்

**அனுப்புநர்**

அஅஅ,
பேட்டை,
திருநெல்வேலி.

**பெறுநர்**

உயர்திரு. மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி அலுவலகம்,
திருநெல்வேலி.

**ஐயா,**

**பொருள்: சாலையைச் சீரமைக்க வேண்டுதல்.**

வணக்கம். நாங்கள் தங்கள் நிர்வாகத்தின் கீழ்வரும் பேட்டையில் குடியிருந்து வருகிறோம். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பாதாளச் சாக்கடைக்காகச் சாலைகள் தோண்டப்பட்டுக் குழாய்கள் பதிக்கப்பட்டன. மீண்டும் சாலைகள் போடப்பட்டன. புதியதாகப் போடப்பட்ட தார்ச்சாலைகள் ஆங்காங்கே கடந்த வாரம் பெய்த மழையில் அடித்துச் செல்லப்பட்டுக் குண்டும் குழியுமாகக் காட்சி அளிக்கின்றன.

சாலையின் குழிகளில் தண்ணீர் தேங்கி நிற்பதால் மாணவர்களும், பொதுமக்களும் கடும் இன்னலுக்கு ஆளாகின்றனர். எனவே உடனடியாகச் சாலையைச் சீரமைக்க வேண்டுமாய்த் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி !

இப்படிக்கு,
**தங்கள் உண்மையுள்ள,**
அஅஅ,
சமூக நல ஆர்வலர்,
(ஊர் மக்கள் சார்பாக)

அஅஅ,
___|___|20___

**உறைமேல் முகவரி:**

| **பெறுநர்** | அ.தலை |
|---|---|
| உயர்திரு. மாநகராட்சி ஆணையர் அவர்கள்,<br>மாநகராட்சி அலுவலகம்,<br>திருநெல்வேலி. | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com